(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 5(6).]

# பாராளுமன்றம்

## 5 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2017 பெப்ரவரி 09 வியாழக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2017 பெப்ரவரி 21, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்,— புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2006 ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க, புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபைச் சட்டத்தின் 33 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 30 ஆம் பிரிவின் கீழ் விதித்துரைக்கப் பட்டனவான புகையிலை உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்வதனை அல்லது விற்பதனைத் தடைசெய்தல் தொடர்பில் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 செத்தெம்பர் 01 ஆம் திகதிய 1982/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மற்றும் 2016 திசெம்பர் 15 ஆம் திகதிய 1997/22 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் திருத்தம் செய்யப்பட்டுப் பிரசுரிக்கப்பட்டதும், 2017.02.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2016 திசெம்பர் 06 ஆம் திகதிய 1996/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.02.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2016 நவம்பர் 10 ஆம் திகதிய 1992/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.02.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்,— குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 2013 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7(2) ஆம் பிரிவின் கீழ் அச்சட்டத்தின் கால எல்லை தொடர்பில் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 சனவரி 18 ஆம் திகதிய 2002/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.02.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*
அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 (4) ஆம் பிரிவின் கீழ் உத்தேசிக்கப்பட்ட கருத்திட்டம் சம்பந்தமாக அளிக்கப்படவுள்ள விலக்களிப்புக்கள் தொடர்பில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 சனவரி 30 ஆம் திகதிய 2004/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையினால் திருத்தப்பட்டவாறான 2016 திசெம்பர் 06 ஆம் திகதிய 1996/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.02.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2017 மார்ச்சு 22, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

465/ ’16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (6)

(அ) (i) 2015 ஆம் ஆண்டினுள் சனாதிபதி அவர்கள் கலந்துகொண்ட வெளிநாட்டு பயணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வெளிநாட்டுப் பயணத்திலும் கலந்துகொண்டவர்களின் பெயர், பதவி மற்றும் இந்நபர்களுக்காக அரச மற்றும் அரசுசார் நிறுவனங்களினால் ஏற்கப்பட்ட செலவுகள் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

547/ ’16

கௌரவ புத்திக பத்திரண,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) இலங்கையில் தங்கம் மற்றும் வெள்ளிக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள பெருந்தொகையானோர் உள்ளனரென்பதையும்;

(ii) தங்கம் மற்றும் வெள்ளி விலையேற்றத்தினாலும் வேறு காரணங்களினாலும் இந்த கைத்தொழில் வீழ்ச்சியடைந்து வருகின்றதென்பதையும்;

(iii) இந்த கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தொழில்களை இழக்கவேண்டிய இடர்நேர்வு நிலவுகின்றதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்கிறாரா?

(ஆ) (i) மேற்படி கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை யாது;

(ii) அந்த ஆட்களுக்கு புதிய கைத்தொழில்களை அபிவிருத்தி செய்துகொள்ள அரசாங்கத்தினால் சலுகைகளை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளனவா;

(iii) ஆமெனில், அச்சலுகைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தங்கம் மற்றும் வெள்ளி விலையைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

902/ '16

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரசியல் பழிவாங்கல்களுக்கு ஆளாகியுள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்க புதிய அரசாங்கத்தின் கீழ் குழுவொன்று நியமிக்கப்பட்டு அல்லது வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், மேற்படி குழு நியமிக்கப்பட்டு அல்லது வேலைத்திட்டமொன்று தயாரிக்கபட்டு இருப்பது அமைச்சரவையின் அங்கீகாரத்தின் கீழா; ஆமெனில், மேற்படி அங்கீகாரம் பெறப்பட்ட திகதி யாது;

(iii) அரசியல் பழிவாங்கல்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக கவனத்திற் கொள்ளப்படும் கால எல்லை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பழிவாங்கலுக்கு ஆளாகியுள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக செயற்படுத்தப்பட்ட வேலைத்திட்டம் யாது;

(ii) அவ்வாறு பழிவாங்கலுக்கு ஆளாகி, நிவாரணங்கள் பெற்று, பதவியுயர்வு பெற்றுள்ளவர்களின் பெயர், பழிவாங்கலுக்கான காரணம் மற்றும் இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிவாரணம் தனித்தனியாக யாது;

(iii) இவர்களுக்கு பதவியுயர்வோடு நிலுவைச் சம்பளம் வழங்கப்படுகின்றதா;

(iv) ஆமெனில், அது எத்திகதியிலிருந்து;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

928/ '16

கௌரவ பிமல் ரத்நாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2015.01.08 தொடக்கம் 2016.08.01 வரை இலங்கை வெளிநாட்டுத் தூதுப் பணிக்காக நியமிக்கப்பட்ட இலங்கை வெளிநாட்டுச் சேவை உத்தியோகத்தர்கள் அல்லாத ஆட்களின் பெயர்கள், பிறந்த திகதிகள், இலங்கை முகவரிகள், கல்வித் தகைமைகள், சேவை அனுபவங்கள், நியமிக்கப்பட்ட நாடுகள் மற்றும் பதவிகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) இவர்களில் இரட்டை பிரஜாவுரிமை நிலைகள்/ வெளிநாட்டு பிரஜாவுரிமையைக் கொண்டுள்ள ஆட்கள் யாவர் என்பதையும்;

(iii) அரசியல் ரீதியாக நியமிக்கப்பட்ட மேற்படி ஆட்களுக்கு ஒப்படைக்கப்பட்ட கடமைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

981/ '16

கௌரவ அஜித் மான்னப்பெரும,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) நுரைச்சோலை நிலக்கரி அனல் மின்வலு நிலையத்திலுள்ள மின் பிறப்பாக்கி களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி ஒவ்வொரு மின் பிறப்பாக்கியும் மின் உற்பத்தி செய்வதை ஆரம்பித்த வருடம் வெவ்வேறாக யாது;

(iii) மேற்படி மின் பிறப்பாக்கிகளுக்காக இலங்கை அரசு ஏற்றுள்ள மொத்தச் செலவு எவ்வளவு;

(iv) இக்கருத்திட்டத்துக்கான நிதி எவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்டது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நுரைச்சோலை மின்வலு நிலையத்தை அமைப்பதற்காகப் பெறப்பட்ட கடன் தொகை திருப்பிச் செலுத்தப்படும் முறை யாது;

(ii) கடன் தொகை செலுத்தப்படுவது இலங்கை மின்சார சபையினாலா அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசினாலா;

(iii) வருடமொன்றுக்கு செலுத்தப்படும் தவணைப் பணத்தின் மொத்தத்தொகை எத்தனை மில்லியன் அமெரிக்க டொலர்கள்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

985/ '16

கௌரவ நளின் பண்டார ஜயமஹ,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2015.12.31 ஆம் திகதியில் இலங்கையின் மின் உற்பத்திக் கொள்ளளவு யாதென்பதையும்;

(ii) புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களின் மூலம் பிறப்பாக்கம் செய்யப்படுகின்ற மின்சாரமானது மொத்த மின் பிறப்பாக்கக் கொள்ளளவின் விகிதாசாரமாக எவ்வளவென்பதையும்;

(iii) உலகில் மின் உற்பத்திக்காக புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களைப் பயன்படுத்துகின்ற நாடுகளுக்கு மத்தியில் இலங்கை பெற்றுள்ள இடம் யாதென்பதையும்;

(iv) சூரிய சக்தி, காற்றுச் சக்தி மற்றும் உயிர்த்தொகுதி சக்தி ஆகிய மூலங்களைத் தழுவியதாக மின் பிறப்பாக்கம் செய்யப்படுவதற்காக இலங்கை அரசாங்கம் அல்லது அரசுடன் தொடர்புடைய நிறுவனங்களால் கடந்த 10 வருட காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள முதலீடு எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) காற்றுச் சக்தி, சூரிய சக்தி மற்றும் உயிர்த்தொகுதிச் சக்தியைத் தழுவியதாக மின் பிறப்பாக்கம் செய்யப்படுதல் தொடர்பான துறைகளுக்குரியதாக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் குறைவடைவதற்கான காரணம் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1003/'16

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் தனியார் மின் உற்பத்தி நிலையங்களை நிர்மாணிப்பதற்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்காக இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபைக்கு இதுவரை கிடைத்துள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை, மூலங்களுக்கு அமைய தனித்தனியே எத்தனை என்பதையும்;

(ii) தற்போது இயங்கி வருகின்ற மின் உற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) உரிமப்பத்திரம் பெற்றுக்கொண்டு, இயங்காதிருக்கின்ற திட்டங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி (iii) இற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபையினால் ஒழுங்குமுறையான சுற்றாடல் பின்னாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(ii) இன்றேல், சுற்றாடல் பின்னாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற தவணைகள் யாவை என்பதையும்;

(iii) உத்தேச "இஹல கதுருகல் தொல" சிறு அளவிலான நீர் மின் கருத்திட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ள ஆரம்ப சுற்றாடல் கற்கை மதிப்பீட்டு அறிக்கையின் பிரதியொன்றை இச்சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1009/ '16

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கண்டி மாவட்டத்தில், உட பலாத்த பிரதேச செயலாளர் பிரிவுக்கு சொந்தமான, எகொட களுகமுவ குடியேற்றத்தில் வசிப்பவர்களில், தற்போது அரசாங்கத்தினால் காணி உறுதிகள் வழங்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி குடியிருப்பாளர்களில் இதுவரையில் காணி உறுதிகள் வழங்கப்படாத குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்குறிப்பிட்ட குடியேற்றத்தில் ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் குடியிருக்கும் காணிபெறுநர்களுக்கு உறுதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1012/ '16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கொழும்பு நகரில் ஒன்று சேர்கின்ற மழை நீர் கடலுக்கு வடிந்தோடுவதற்காக நிலக்கீழ் குழாய் முறைமையொன்றை நிர்மாணிப்பதற்கான திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இத்திட்டத்தை அமைப்பதற்கான ஆலோசனை சேவைகளை வழங்கும் நிறுவனம் யாதென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனத்தை தெரிவு செய்வதற்கு கேள்வி பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(iv) ஆமெனின், அத்திகதி யாதென்பதையும்;

(v) இக்கருத்திட்டத்திற்கென கடன் அல்லது உதவி வழங்கும் நிறுவனம் யாதென்பதையும்;

(vi) மேற்படி (v) இல் குறிப்பிடப்பட்ட கடன் அல்லது உதவித் தொகை எவ்வளவென்பதையும்;

(vii) இக்கருத்திட்டத்தை ஆரம்பிக்க உத்தேசமாயுள்ள காலவரையறை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1019/ '16

கௌரவ நாமல் ராஜபக்ஷ,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு.— (3)

(அ) (i) 2015 சனவரி மாதம் முதல் இற்றைவரையிலான காலப்பகுதியில் சனாதிபதி அவர்களினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட அரச மற்றும் கூட்டுத்தாபனங்களுக்குச் சொந்தமான கட்டிடங்கள் மற்றும் ஏனைய நிர்மாணிப்புகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி நிர்மாணிப்புகளில், 2015 சனவரி மாதத்தின் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட நிர்மாணிப்புகளின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1099/ '16

கௌரவ அசோக்க பிரியந்த,— கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் உள்ள பல கிராமங்கள் கடலரிப்புக்கு உள்ளாகும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்கிராமங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) அவ்வாறு கடலரிப்புக்கு உள்ளாகியுள்ள கிராமங்கள் மற்றும் மக்கள் சார்பாக ஏதேனும் நிவாரண வேலைத்திட்டமொன்று அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அது பற்றிய விபரங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1215/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(ஆ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள அரச நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) L.T.T.E. பயங்கரவாதிகளால் 1983 ஆம் ஆண்டுக்கு பின்னர் அழிக்கப்பட்டுள்ள அரச நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) அழிவடைந்துள்ள மேற்படி சொத்துகள் பற்றி அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய மதிப்பீடொன்று செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அச்சொத்துகளின் மொத்த பெறுமதி யாதென்பதையும்;

(v) அழிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு சொத்து தொடர்பாகவும் பொறுப்புக்கூற வேண்டிய பயங்கரவாதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அந்த நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(vii) மேற்படி (i) - (vi) வரை விசாரிக்கப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பான முழுமையான அறிக்கையொன்றை இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1282/ '16

கௌரவ டலஸ் அலகப்பெரும,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தினால்,

(i) சேதமடைந்துள்ள வீடுகளின் எண்ணிக்கை;

(ii) அழிவடைந்த அல்லது பாதியளவு அழிவடைந்த வீடுகளுக்கு பதிலாக நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய வீடுகளின் எண்ணிக்கை;

ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி அ (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வீடுகளில் இதுவரை பகிர்ந்தளிக்கப் பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி வீடுகள் கிடைக்கப்பெற்ற நபர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iii) தற்போது சுனாமி வீடுகளில் வாழ்கின்ற நபர்களில் எத்தனை பேருக்கு உறுதிகள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும்;

(iv) மேற்படி (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கை, ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(v) இது வரை உறுதிகள் கிடைக்காத வீடுபெறுநர்களுக்கு துரிதமாக உறுதிகளை வழங்க எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(vi) உறுதிகள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்குஅறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

697/ '16

கௌரவ புத்திக பத்திறண,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அரக்கு சார்ந்த உற்பத்திக் கைத்தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளவர்கள் தற்போது அக்கைத்தொழிலிலிருந்து விலகிச் செல்கின்றனர் என்பதையும்;

(ii) மூலப்பொருள் மற்றும் சந்தை தொடர்பாக பிரச்சினைகள் காணப்படுகின்றன என்பதையும்;

(iii) இக்கைத்தொழிலானது இந்நாட்டுக்கு பெருமளவு வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டித்தரக் கூடியதொன்றாகுமென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அரக்கு சார்ந்த உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், 2015 ஆம் ஆண்டினுள் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏற்றுமதி வருமானம் யாதென்பதையும்;

(iii) ஏற்றுமதி செய்யப்படுவதில்லையெனில், ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அது எத்திகதியிலிருந்து என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) நாட்டினுள் அரக்கு சார்ந்த கைத்தொழிலுக்கு தேவையான சந்தையை விரிவுபடுத்த அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

945/ ’16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2015.12.09 ஆந் திகதி தொடக்கம் 2016.09.30 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குள் நியமிக்கப்பட்ட தூதுவர்கள், உயர் ஸ்தானிகர்கள், பிரதித் தூதுவர்கள், பிரதி உயர் ஸ்தானிகர்கள் மற்றும் அந்த மட்டத்தைச் சேர்ந்த வேறு பதவிகளை வகிக்கின்ற வெளிநாட்டுச் சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் வெளிநாட்டுச் சேவையைச் சாராத உத்தியோகத்தர்கள் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு;

(ii) 2016.09.30 ஆந் திகதியளவில் மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்ட பதவிகளை வகிக்கின்ற வெளிநாட்டுச் சேவையை சாராத உத்தியோகத்தர்களின் பெயர்கள், தொழில்சார் தகைமைகள், அதிகபட்ச கல்வித் தகைமைகள் மற்றும் தற்போது வகிக்கின்ற பதவிகள் வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2017 மார்ச்சு 23, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

684/ ’16

கௌரவ புத்திக பத்திரண,— கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் வருடாந்த நுகர்வுக்கு தேவையான ஆடு, கோழி, ஒட்டகம், செம்மறி ஆடு மற்றும் மாடு ஆகிய இறைச்சி வகைகளின் அளவு அண்ணளவாக எவ்வளவென்பதையும்;

(ii) அத்தொகையை இலங்கையினுள் உற்பத்தி செய்வதற்கான ஆற்றல் உள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், இறக்குமதி செய்யப்படுகின்றதா என்பதையும்;

(iv) இறக்குமதி செய்யப்படுமாயின், 2016 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(v) இலங்கைக்கு இறைச்சி இறக்குமதி செய்யப்படுகின்ற பிரதான நாடுகள் எவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை இறைச்சியை ஏற்றுமதி செய்கின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், 2016 ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட (அ)(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள இறைச்சி வகைகள் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) 2016 ஆம் ஆண்டில் இறைச்சி ஏற்றுமதியின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் எவ்வளவென்பதையும்;

(iv) இலங்கையில் வருடாந்தம் இறைச்சிக்காக கொல்லப்படுகின்ற ஆடுகள், கோழிகள், மாடுகள் ஆகியவற்றின் எண்ணிக்கை அண்ணளவாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

903/'16

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பதவியணிக்கு (cadre) ஏற்ப அதிகார சபையின் நிரந்தர பதவிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகள் யாவையென்பதையும்;

(iii) தற்போது பதில் கடமையாற்றுகின்ற நிலையிலுள்ள பதவிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி பதவிகள் யாவையென்பதையும்;

(v) பதில் கடமையாற்றுகின்ற பதவிகளுக்கு நிரந்தர அலுவலர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

982/ '16

கௌரவ அஜித் மான்னப்பெரும,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) சூரிய சக்தியை பயன்படுத்தி இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரத்தின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) பிரசைகள் தமது வீடுகளில் அல்லது வியாபார நிலையங்களில் பொறுத்தியுள்ள சூரியக் கலங்களின் மூலம் உற்பத்தி செய்து தேசிய முறைமைக்கு ஒரு நாளினுள் சேர்க்கின்ற மின்சாரத்தின் அளவு எவ்வளவென்பதையும்;

(iii) சூரிய சக்தியினூடாக மின்சாரம் உற்பத்தி செய்தல் தொடர்பில் செலுத்தப்படுகின்ற கவனம் குறைவடைதற்கான காரணம் யாதென்பதையும்;

(iv) சூரிய சக்தியினூடாக மின்சாரத்தை உற்பத்தி செய்து அந்த மின்சாரத்தை தேசிய முறைமைக்கு சேர்க்கின்ற தமது பாவனையாளர்களுக்கு இலங்கை மின்சார சபை வழங்கியுள்ள நிவாரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

997/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 1972 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் தமிழ் பிரிவினைவாதப் பயங்கரவாதம் காரணமாக,

(i) மரணமடைந்த மற்றும் காயமடைந்த சிவில் பாதுகாப்பு படையினர் உள்ளிட்ட இராணுவ அங்கத்தவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவவ்வளவு;

(ii) மரணமடைந்த மற்றும் காயமடைந்த பயங்கரவாதிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு;

(iii) மரணமடைந்த மற்றும் காயமடைந்த பொது மக்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1004/ '16

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) யுத்தத்தின் பின்னர் அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்த தமிழ் மக்களுக்குச் சொந்தமான பெருமளவு தங்கம் எங்கேனும் நம்பிக்கைப் பொறுப்பில் வைப்பீடு செய்யப்பட்டதா என்பதையும்;

(ii) இவ்வைப்பீடுகளைக் கணக்கிட முடியுமா என்பதையும்;

(iii) இதுவரையில் அவர்களின் தங்கம் அவர்களுக்கு திருப்பிக் கொடுக்கப்படவில்லையென முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளனவா என்பதையும்;

(iv) மேற்படி (i) தொடர்பில் கிடைக்கக் கூடியதாகவுள்ள விபரங்கள்;

(v) இக்கோரிக்கைகளைத் தீர்ப்பதற்காக அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளையும் ;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1134/ '16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் நாட்டினுள் அரிசி பற்றாக்குறை ஏற்பட்டதாக லங்கா சதொசவிற்கு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் பிரகாரம் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் அளவு எவ்வளவென்பதையும்;

(iii) அரிசி இறக்குமதி செய்யப்பட்ட காலகட்டங்கள் யாவையென்பதையும்;

(iv) அதன் பொருட்டு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) அதன்பொருட்டு பெறுகைகள் நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், விலைகளைச் சமர்ப்பித்துள்ள கம்பனிகள் யாவையென்பதையும்,

(vii) மேற்படி அரிசித் தொகையின் பெறுமதி யாதென்பதையும்,

(viii) மேற்படி அரிசித் தொகை களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்ட அரசாங்க மற்றும் தனியார் துறையின் களஞ்சியங்கள் யாவையென்பதையும்;

(ix) அரிசியை களஞ்சியப்படுத்துவதற்காக செலவிடப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(x) தனியார் துறையின் களஞ்சிய வசதிகளை பெற்றுக்கொள்ளும்போது பெறுகைகள் நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் என்?

1225/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிமிக்க இடங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி இடங்களில் தற்போது பேணல் பணிகள் மேற்கொள்ளப்படுகின்ற இடங்கள் யாவை;

(iii) இதற்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(iv) L. T. T. E. பயங்கரவாதிகளால் அழிக்கப்பட்ட தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிமிக்க இடங்கள் யாவை;

(v) மேற்படி அழிவுகள் பற்றிய மதிப்பீடொன்று செய்யப்பட்டிருப்பின், மதிப்பீட்டுப் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு;

(vi) மேற்படி அழிவுகள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(vii) மேற்படி அனைத்தினதும் முழுமையானதோர் அறிக்கையை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1288/ '16

கௌரவ டலஸ் அலஹப்பெரும,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதைய அரசாங்கத்தினால், உலக வங்கி உதவிக் கருத்திட்டங்களாக செயற்படுத்தப்படுவதாக பெரும் பிரசாரம் செய்யப்பட்டுள்ள, "அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" கருத்திட்டத்திற்கான நிதி ஏற்பாடுகளை வழங்குகின்ற மூலங்கள் யாவையென்பதையும்,

(ii) உலக வங்கிக்கு மேற்படி கருத்திட்டம் தொடர்பான சாத்தியக்கூறு ஆய்வறிக்கையோ அல்லது பிரேரணையோ முன்வைக்கப்பட்டிருப்பின், அத்திகதி யாதென்பதையும்;

(iii) உலக வங்கியினால் மேற்படி கருத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்;

(iv) வழங்கப்பட்டிருப்பது கடனா; நிதிஉதவியா; இன்றேல், கொடையா என்பதையும்;

(v) மேலே (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் பௌதீக மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மாத்தறை மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பாடசாலைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பாடசாலைக்கும் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகள் தனித்தனியாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

848/16

கௌரவ புத்திக பத்திரண,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தளை மாவட்டத்தின் வஹகோட்டே பிரதேசத்தில், போத்துக்கேய வம்சாவளி மக்கள் வாழும் கிராம அலுவலர் பிரிவுகள் யாவையென்பதையும்;

(ii) தற்போது அப்பிரதேசங்களில் வாழும் ஆட்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) இத்தகைய ஆட்கள் இலங்கையில் வேறு பிரதேசங்களிலும் வாழ்வதாக அறிக்கையிடப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்த மக்களின் கல்வி, உயர்கல்வி மற்றும் சுகாதாரம் ஆகிய அடிப்படை தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கான உரிமை அரசாங்கத்தினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) அம்மக்களின் கலாசார தனித்துவங்களையும் பாரம்பரிய மரபுரிமைகளையும் பாதுகாத்துக் கொண்டு வாழ்வதற்காக அரசாங்கம் அனுசரணை வழங்கியுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அவ்வனுசரணைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு, அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

983/ '16

கௌரவ அஜித் மான்னப்பெரும,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற காலநிலை மாற்றங்கள் தொடர்பான பாரிஸ் மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி தீர்மானம் தொடர்பாக இலங்கை குடியரசின் இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்தத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சினால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1018/ '16

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) வேரஸ் கங்கை கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் சுனேத்ராதேவி வீதி வரை மேற்கொள்ளப்பட்டு இன்றளவில் நிறுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) நிர்மாணப் பணிகள் நிறுத்தப்பட்டதால் சுற்றிலுமுள்ள பிரதேசங்களில் பெருமளவில் நுளம்புகள் பரவி டெங்கு போன்ற உயிர்கொல்லி நோய்கள் பரவியுள்ளதென்பதையும்;

(iii) சுனேத்ராதேவி வீதியில் வசிக்கும் சிவில் பொறியியலாளர் திஸ்ஸ டீ சில்வா என்பவர் இது தொடர்பாக மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திரு. நிஹால் ரூபசிங்கவை அறிவுறுத்தியுள்ள போதிலும், பயனெதுவும் கிடைக்கவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இது தொடர்பாக மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கை யாதென்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1043/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் சபையின் வருடாந்த அமர்வுக்கான சனாதிபதி அவர்களின் விஜயத்தின்போது கலந்து கொண்ட தூதுக் குழுவினர் எத்தனை பேர்;

(ii) மேற்படி விஜயத்தில் கலந்து கொண்ட ஆட்களின் பெயர்கள் மற்றும் இவர்கள் தூதுக் குழுவில் உள்ளடங்கிய அடிப்படை வெவ்வேறாக யாவை;

(iii) மேற்படி விஜயத்துக்காக அரசு, அரச கூட்டுத்தாபனங்கள் நியதிச்சட்ட சபைகள் மற்றும் அரச கம்பனிகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்தச் செலவுகள் எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1136/ '16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015.09.01 ஆந் திகதி தொடக்கம் 2016.10.01 ஆந் திகதி வரை,

(i) அரசாங்க கட்டடங்களில் பேணிவரப்பட்ட அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்கள் யாவை;

(ii) வாடகை அடிப்படையில் பெறப்பட்டு பேணிவரப்படுகின்ற இராஜாங்க அமைச்சுகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டடங்களின்,

(i) மாதாந்த வாடகை;

(ii) பரப்பளவு;

(iii) முற்பணமாகச் செலுத்தப்பட்ட பணத்தொகை மற்றும் காலப்பகுதி;

(iv) கட்டட உரிமையாளரின் பெயர் மற்றும் முகவரி;

தனித்தனியாக யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) வாடகை அடிப்படையில் பெறப்பட்டுள்ள கட்டடங்களுக்கு மாதாந்தம் செலுத்தப்படுகின்ற மொத்த வாடகைப் பணம் மற்றும் செலுத்தியுள்ள மொத்த முற்பணத் தொகை எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1234/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இறுதியாக மேற்கொள்ளப்பட்ட காட்டு யானைகளின் தொகை மதிப்பின்படி ஒதுக்கங்களிலும் சரணாலயங்களிலுமுள்ள மொத்த காட்டு யானைகளின் எண்ணிக்கை யாது;

(ii) தற்பொழுது யானை - மனித மோதல் உக்கிரமடைந்துள்ள மாவட்டங்களில் கிராம அலுவலர் பிரிவு மட்டத்திலான முழுமையான அறிக்கையை சமர்ப்பிப்பாரா;

(iii) மேற்படி கிராம அலுவலர் பிரிவுகளில் வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(iv) மேற்படி பிரதேசங்களில் விவசாயம் செய்யப்படும் விவசாய நிலங்களின் பரப்பளவு யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் யானை - மனித மோதலைக் குறைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை களுக்காக செலவு செய்யப்பட்ட மொத்த பணத் தொகை யாது;

(ii) அதன் முழுமையான அறிக்கையை சமர்ப்பிப்பாரா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1290/ '16

கௌரவ டலஸ் அழஹப்பெரும,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தில் தேயிலை பயிரிடப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை மாத்தறை மாவட்டத்தில்,

(i) தேயிலைக் காணிகளிலிருந்து பெறப்பட்ட அறுவடை யாதென்பதையும்;

(ii) அரசாங்க உர மானியத்தைப் பெற்றுக்கொண்ட விவசாயிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) தேயிலை விவசாயிகளுக்கு அரசாங்க உர மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட உரத்தின் அளவு யாதென்பதையும்;

ஒவ்வொரு வருடத்தின் பிரகாரம் தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2017 மார்ச்சு 24, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

861/ '16

கௌரவ புத்திக பத்திரண,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யுத்த களத்தில் மரணித்த மற்றும் அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களின் குடும்பங்கள் தற்போது சமூக பொருளாதார பிரச்சினைகள் பலவற்றுக்கு முகம்கொடுத்துள்ளன என்பதையும்;

(ii) இவர்களை அரவணைப்பது நாட்டிலுள்ள சகலரினதும் பொறுப்பாகும் என்பதையும்;

(iii) குறித்த வீரர்களின் மனைவிமார்களின் மற்றும் பிள்ளைகளின் நலனோம்பல் அதிகரிக்கப்பட வேண்டுமென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி இராணுவ வீரர்களது குடும்பங்களின் நலனோம்பலுக்காக அரசாங்கம் நடைமுறைபடுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி குடும்பங்களின் பிள்ளைகளது கல்வி நடவடிக்கைகள் மற்றும் தொழில் தேவைகள் சம்பந்தமாக அரசாங்கம் தலையிட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அது எவ்வாறு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

984/ '16

கௌரவ அஜித் மான்னப்பெரும,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) தற்போது இலங்கையிலுள்ள மின் பாவனையாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இலங்கையின் மின் பாவனையாளர்களில், இலங்கை மின்சார சபையினால் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ள பாவனையாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இலங்கை மின்சார (தனியார்) நிறுவனத்தினால் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ள பாவனையாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மின்வலு, புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரினால் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்படுவதாக அண்மைக் காலத்தில் கூறப்பட்ட சூட்டிகை மின் மானிகளின் (Smart Meters) மூலம் நிறைவேற்றிக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் யாவையென்பதையும்;

(ii) தற்போது பொருத்தப்பட்டுள்ள சூட்டிகை மின் மானிகளின் (Smart Meter) எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேலே (ஆ)(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிவின் பிரகாரம் இலங்கையின் அனைத்து மின் பாவனையாளர்களுக்கும் மேற்படி சூட்டிகை மின்மானிகளை வழங்கி முடிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1070/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1983 யூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் இடம்பெற்ற இனக் கலவரத்தின் காரணமாக,

(i) உயிரிழந்த, காயமடைந்த மற்றும் இடம்பெயர்ந்த சிங்கள மக்களின் எண்ணிக்கை, அவர்கள் வாழ்ந்த மாவட்டங்களுக்கமைய வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(ii) உயிரிழந்த காயமடைந்த மற்றும் இடம்பெயர்ந்த மொத்த சிங்கள மக்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1093/ '16

கௌரவ அசோக் பிரியந்த,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் புத்தளம் மாவட்டத்தில் குளங்கள் மறுசீரமைப்பு கருத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றதாக என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கருத்திட்டத்தின் கீழ் தற்போது புத்தளம் மாவட்டத்தில் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள குளங்கள் யாவையென்பதையும்;

(iii) அதற்காக செலவு செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1138/ '16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது காணப்படுகின்ற போதனா வைத்தியசாலைகள் யாவை;

(ii) மேற்படி ஒவ்வொரு போதனா வைத்திசாலையிலும் சிகிச்சைப் பயிற்சியை வழங்குகின்ற அரசாங்க பல்கலைக்கழகங்களின் மருத்துவ பீடங்கள் யாவை;

(iii) மாலபே பிரதேசத்தில் "டாக்டர் நெவில் பர்னாந்து இலங்கை – ரஷ்யா நட்புறவு போதனா வைத்தியசாலை" எனும் பெயரில் தனியார் வைத்தியசாலையொன்று பேணிவரப்படுகின்றதா;

(iv) மேற்படி தனியார் வைத்தியசாலையை போதனா வைத்தியசாலையாக அறிமுகஞ்செய்ய சுகாதார அமைச்சின் அனுமதி வழங்கப்பட்டுள்ளதா;

(v) ஆமெனில், மேற்படி அனுமதி வழங்கப்பட்ட ஆவணத்தைச் சபையில் சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1167/ '16

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே,— மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அரசாங்கத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட கண்டி நகர அபிவிருத்திக் கருத்திட்டத்திற்காக 2014 ஆம் ஆண்டின் இறுதியளவில் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் செலவிடப்பட்டிருந்த பணத்தொகை யாது;

(ii) இக்கருத்திட்டத்திற்காக கடந்த அரசாங்க காலத்தில் வெளிநாட்டு உதவிகள் ஊடாக ஒதுக்கப்பட்ட பணத்தில் அத்தருணமாகும்போது கிடைத்திருந்த தொகை யாது;

(iii) புதிய நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஏறக்குறைய 20 மாதங்கள் கழிந்துள்ள போதிலும், அக்காலப்பகுதிக்குள் இக்கருத்திட்டத்தின் எவ்விதமான அபிவிருத்திப் பணியும் இடம்பெறவில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இலங்கையின் பிரதான நகரமொன்றான கண்டி போன்றதொரு நகரத்தின் நகர அபிவிருத்திக் கருத்திட்டத்தை இடைநிறுத்த அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1236/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தினுள் 1983 ஆம் ஆண்டளவில் இருந்த மொத்த வீதிகளின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றில் தார் இடப்பட்டிருந்த வீதிகளின் எண்ணிக்கை மற்றும் கி.மீ. அளவு எவ்வளவு;

(iii) 1983 ஆம் ஆண்டு தொடக்கம் யுத்தம் முடிவடையும் வரை இம்மாவட்டத்தில் வீதிகளை நிர்மாணிப்பதற்காக அப்போதிருந்த அரசாங்கங்களினால் செலவு செய்யப்பட்ட நிதித் தொகை ஒவ்வோர் ஆண்டின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு;

(iv) யுத்தம் முடிவடைந்த பின்னர் இம்மாவட்டத்தில் வீதிகளை நிர்மாணிப்பதற்காக ஒவ்வோர் ஆண்டிலும் ஒதுக்கப்பட்ட நிதித் தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(v) இது தொடர்பான முழுமையான அறிக்கையை இச்சபையில் சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1280/ '16

கௌரவ டலஸ் அழஹப்பெரும,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "அனைவருக்கும் மின்சாரம்" தொனிப்பொருளின் கீழ் கடந்த ஆட்சிக்காலத்தில் மின்பிறப்பாக்கம், மின்சார விநியோகம் மற்றும் புதிய இணைப்புகளை வழங்குதல் ஆகிய துறைகளில் குறிப்பிடத்தக்க அரும்பணி ஆற்றப்பட்டதென்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

(ii) 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை மாத்தறை மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ள மின்இணைப்புகளின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடம் மற்றும் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மாத்தறை மாவட்டத்தில் தேசிய மின்சார முறைமை ஊடாக மின்சாரத்தை வழங்கக்கூடிய இயலுமை உள்ளபோதிலும், இற்றைவரை மின்சாரம் வழங்கப்படாதுள்ள வீடுகளின் எண்ணிக்கை பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக வெவ்வேறாக எவ்வளவு;

(ii) தேசிய மின்சார முறைமையிலிருந்து மின்சாரம் வழங்க இயலாத/சிரமமான வீடுகள் இனங்காணப்பட்டுள்ளனவா;

(iii) ஆமெனில், அந்த வீடுகளின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக வெவ்வேறாக எவ்வளவு;

(iv) மேலே (ii)இல் குறிப்பிட்டுள்ள வீடுகளுக்கு மின்சாரம் வழங்குவதற்காக கடைப்பிடிக்கப்படுகின்ற வழிமுறைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1348/ '16

கௌரவ லக்கி ஜயவர்தன,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மின்சார சபைக்கு மின்சாரம் வழங்கும் சிறு மின்வலு நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றில் சபைக்கு மற்றும் தனியார் துறைக்கு சொந்தமான மின்வலு நிலையங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்ட மின்வலு நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள் யாவை;

(iv) சபைக்கு சொந்தமான மின்வலு நிலையங்களினால் பிறப்பாக்கம் செய்யப்படும் மொத்த மின்சார கொள்ளளவு யாது;

(v) ஒவ்வொரு மின்வலு நிலையத்தினதும் கொள்ளளவு வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தனியார் மின்வலு நிலையங்களிலிருந்து சபை ஒரு வருடத்தில் பெற்றுக்கொள்ளும் மொத்த கொள்ளளவு யாது;

(ii) ஒவ்வொரு நிறுவனத்திலிருந்தும் பெறப்படும் மின்சார கொள்ளளவு வெவ்வேறாக யாது;

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்ட மின்சாரத்துக்காக செலுத்தப்படும் மொத்தத் தொகை எவ்வளவு;

(iv) இத்தொகை நிறுவனத்தின்படி வெவ்வேறாக யாது;

(v) தனியார் மின்வலு நிலையங்களிலிருந்து வழங்கப்படும் மின்சாரத்துக்காக அந்நிறுவனங்களுக்கு ஆரம்பம் முதல் இன்று வரை செலுத்தப்பட்டுள்ள பணத் தொகை வெவ்வேறாக யாது;

(vi) தற்போது சபையின் அனுமதியுடன் மேலும் சிறிய மின்வலு நிலையங்களை நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதா;

(vii) ஆமெனில், அவை யாவை;

(viii) அவற்றை நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள இடங்கள் மற்றும் அவற்றின் உரிமையாளர்கள் யாவர்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன் ?

1363/ ’16

கௌரவ ரோஹினி குமாரி விஜேரத்ன,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணி சீர்திருத்தச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ள பயிர்களுடன் கூடிய காணிகளில், இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கும் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கும் வர்த்தமானி அறிவித்தல் மூலமாக நிர்வாகம் மற்றும் முகாமைத்துவத்துக்காக ஒப்படைக் கப்பட்டுள்ள காணிகளின் அளவு தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக மேற்படி காணிகளின் பெயர்கள் மற்றும் அளவுகள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி காணிகள் அளவை செய்யப்பட்டு எல்லைகள் அடையாளம் காணப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) மேற்படி நிறுவனங்கள் குறிப்பிட்ட தோட்டங்களை நிருவகிப்பதன் மூலமும் முகாமைத்துவம் செய்வதன் மூலமும் தேசிய பொருளாதாரத்திற்கு வழங்கும் பங்களிப்பு எவ்வளவென்பதையும்,

(v) மேற்படி காணிகளில் குறிப்பிட்ட நிறுவனங்களின் நேரடி நிருவாகத்தின் கீழுள்ள காணிகளின் அளவு பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக தனித்தனியாக எவ்வளவென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பிராந்திய பெருந்தோட்ட கமபனிகளால் நிருவகிக்கப்படுகின்ற காணிகளின் அளவு பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி காணிகள் குறிப்பிட்ட கம்பனிகளுக்கு குத்தகை ஒப்பந்தங்களின் மீது வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) அவ்வாறு செய்வதற்கு மேற்படி நிறுவனங்களுக்கு சட்டரீதியான உரிமை உள்ளதா என்பதையும்;

(iv) குறிப்பிட்ட பெருந்தோட்டக் கம்பனிகள் மேற்படி தோட்டங்களை முகாமைத்துவம் செய்வதன் ஊடாக பொருளாதாரத்திற்கு வழங்குகின்ற பங்களிப்பு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1371/’16

கௌரவ பந்துல குணவர்தன,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2016 வரவு செலவுத் திட்டத்தின் 125 ஆம் இலக்க முன்மொழிவின் பிரகாரம், நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களுக்கு உதவுகின்ற இன்கியுபேடராக செயற்படுகின்ற “சிறிய கைத்தொழில் பூங்காக்கள்” கருத்திட்டத்தின் முன்னேற்றம் யாதென்பதையும்;

(ii) மேற்படி கைத்தொழில் பூங்காக்களை அமைப்பதற்கு உத்தேசித்திருந்த மொனறாகல, புத்தளம், யாழ்ப்பாணம், வன்னி மற்றும் அம்பாறை மாவட்டங்களில் காணிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) இந்த சிறிய கைத்தொழில் பூங்காக்கள் கருத்திட்டம் தொடர்பாக மேற்படி மாவட்டங்களின் மாவட்ட செயலாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி அரச ஊழியர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற அறிக்கைகளை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்பைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

862/ '16

கௌரவ புத்திக பத்திரண,— கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களைக் கட்டியெழுப்புவதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் பலத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதையும்;

(ii) அதன் மூலம் தொழிலின்மையை இல்லாதொழிக்கச் செய்ய முடியுமென்பதையும்;

(iii) அது வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டித்தருகின்ற ஒரு வழியாகும் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களைக் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை யாவையென்பதையும்;

(iii) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களுக்காக நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற அரச நிறுவனங்களின் பௌதீக மற்றும் மனித வள அபிவிருத்திக்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அது எவ்வாறு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1005/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015.01.10 ஆம் திகதியிலிருந்து 2016.09.30 ஆம் திகதி வரை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட கட்டடங்களில் இயங்குகின்ற அமைச்சுகள் மற்றும் அமைச்சு அலுவலங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி கட்டடங்களின் மாதாந்த வாடகை வெவ்வேறாகவும் மொத்த கூட்டுத்தொகையாகவும் எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1284/'16

கௌரவ டலஸ் அலஹப்பெரும,— தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரைக் கேட்பதற்கு ,— ( 1 )

( அ) (i) தெவிநுவர, வெஹெல்கொட, 'பிரேமசிறி', இல்லத்தில் வசிக்கும், திரு. எச். கே. பிரேமதிலக்க 1978.05.05 தொடக்கம் 1986.11.10 வரை இலங்கை விமானப்படையில் தொண்டர் சிப்பாயாகவும், 1986.11.03 தொடக்கம் 1995.11.30 வரை தொழில் திணைக்களத்தில் மேசன் பயிற்சி ஆலோசகராகவும், 1995.11.30 தொடக்கம் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையில் இணைந்து பணியாற்றினார் என்பதையும்;

(ii) 60 வயது நிறைவடைந்ததமையால் 2015.09.18 ஆம் திகதி இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையிலிருந்து ஓய்வு பெறச்செய்யப்பட்டுள்ளார் என்பதையும்;

(iii) அரச சேவையில் 33 ஆண்டுகள் 04 மாதங்கள் 13 நாட்கள் பணிபுரிந்த போதிலும் அவரின் ஓய்வூதியம் கணிப்பீடு செய்யப்படவில்லை என்பதையும்;

(iv) தொழில் திணைக்களத்தில் பணிபுரிந்த காலத்துக்குரிய ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்வதற்காக முன்வைக்கப்பட்ட வேண்டுகோள், இவர் தொழிற்பயிற்சி அதிகாரசபைக்கு எந்த தொகுதியின் கீழ் விடுவிக்கப்பட்டார் என்பது தெளிவில்லை எனும் கருத்தின் அடிப்படையில் இதுவரை நிறைவேற்றப்படவில்லை என்பதையும்;

(v) பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரினால் ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்துக்கு எழுதிய PNS/P/P7/PEN/PROB(ii)/TEM ஆம் இலக்க 2016.07.14 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அவதானிப்புக்கள் கோரப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) திரு. பிரேமதிலக்கவின் ஓய்வூதிய உரித்தை வழங்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1377/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2016 வரவுசெலவு திட்டத்தில் 131 ஆம் இலக்க முன்மொழிவின் பிரகாரம், கமத்தொழில் விரிவாக்க உத்தியோகத்தர்களின் அறிவை தனியார் துறை பண்ணைகளுக்காகவும் கட்டணம் அறவிட்டு பெற்றுக்கொடுக்க முன்மொழியப்பட்டதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அவ்வாறு கட்டணம் அறவிட்டு தனியார் துறைக்கு அறிவை பெற்றுக்கொடுத்த அரச உத்தியோகத்தர்களின் பெயர் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) கமத்தொழில் விரிவாக்க உத்தியோகத்தர்களின் அறிவை பெற்றுக்கொண்ட தனியார் துறைக் கம்பனிகளின் பெயர் பட்டியலை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?